பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 12 வியாழக்கிழமை 28.11.2024 கதிர் 021

### இனி இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்ததுமே கை வைத்தது வாகனங்களில்தான். முதலில் ஆளும் தரப்பு அமைச்சர்கள் மற்றும் அரசுத் தலைவரின் ☞ 2

# வடக்கு கிழக்கு எங்கும் மாவீரர் தின பேரெழுச்சி

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் மக்கள் அஞ்சலி







கொட்டும் மழைக்கு மத்தியிலும் வடக்குகிழக்கில்நேற்றுபேரெழுச்சியுடன் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் மாலை 6.05 மணிக்கு சுடரேற்றி உறவினர்களும் ☞ 2

## மாவீரர் தினம் குறித்த சபாநாயகரின் கருத்து

வடக்கு மக்கள் சாதாரணமாக ஒன்றுகூடி கலந்துரையாடுகிறார்களே தவிர, அவை பெரும் மாவீரர் தினக் கொட்டாங்கள் என்றுதான் கருதவில்லை என சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்தார்.

நவம்பர் 27 மாவீரர் தின நிகழ்வுகளையொட்டி அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இப்படிப் பதிலளித்துள்ளார். வடக்கு மக்கள் மீது தனக்கு உண்மையான நம்பிக்கை உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்துதரப்பினரும்ஒன்றிணைந்து எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே வடக்கு உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் எதிர்பார்ப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 80 பேர் விண்ணப்பம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியிலிருந்துவீடுகளைப்பெறுவதற்காக இதுவரை 80 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று நாடாளுமன்றத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர்களில் கிட்டத்தட்ட அறுபது பேர் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, மாதிவெல வீட்டு வளாகத்திலிருந்துஇன்னும்ஏழுமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ☞ 8



## கைதடி ஆலயப் பூசகரை கட்டிவைத்துக் கொள்ளை



யாழ். மாவட்டம் கைதடியில் ஆலயப்பூசகர்ஒருவரைக்கட்டிவைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் பணத்தினையும் கொள்ளை இட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதடி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கௌரி அம்மன் ஆலயத்திலேயே இந்த கொள்ளை சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

பூசகரின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் விரைந்தபோது இரண்டு கொள்ளையர்கள் பூசகர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியையும், 45 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பிச் செல்வதைப் பார்த்துள்ளனர்.

கொள்ளையருக்கு உதவினார் என்று கருதப்படும் பெண் ஒருவர் அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைதான சந்தேகநபரை இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் திகதி இன்னும் முடிவில்லை

### நேற்றுக் கூடியது ஆணைக்குழு

எதிர்வரும்உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கானசாத்தியமுள்ள திகதிகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக் கலந்துரையாடியுள்ளது.

பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் திகதியை பயன்படுத்துவதுதொடர்பில்கலந்துரையாடப்பட்டதாகதேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார். ஆனால் இன்னும் இறுதி திகதி முடிவு செய்யப்படவில்லை என்று கூறினார்.

ஆணையம் வரும் நாட்களில் மீண்டும் கூடி இறுதி திகதி முடிவு செய்யும்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவாக நடத்த வேண்டும் ☞ 8

## மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்தார். கல்கிரியாகம, புப்போகமவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முதற்கட்ட விசாரணையில், வீட்டில் அறுந்திருந்த மின்கம்பியிலிருந்து பாய்ந்த மின்சாரம் அவரைக் கொன்றதாகத் தெரியவந்திருக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புப்போகம கட்டுப்பட்டகம பகுதியைச் சேர்ந்த அபேகோன் செனவிரத்ன பண்டித முதியன்சலாகே என்பவரது வீட்டில் வசித்து வந்த உபேக்ஷா பிரசனனி கதானி என்ற 31 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே சம்பவத்தில் ☞ 8

## கோப், கோப்பா குழுக்களுக்கு பெயர்களை வழங்க அறிவிப்பு

நாடாளுமன்றத்தின் கோப் மற்றும் கோப்பா உள்ளிட்ட குழுக்களை அமைப்பதற்கு ஏதுவாக அவற்றுக்கான உறுப்பினர்களின் பெயர்களைத் தருமாறு சபாநாயகர் சபுமல் ரன்வல ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

டிசெம்பர் 3 நாடாளுமன்றம் கூடும் போது ☞ 8

## நாணய நிதியத்திற்கு நடனமாடும் இந்த ஆட்சியால் மீட்சி கிடைக்காது

### சீறிப் பாய்கிறார் எதிர்க் கட்சித் தலைவர்

மக்கள் ஆணையை தூக்கி எறிந்துவிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் சொல்லுக்கு நடனமாடும் இந்த ஆளும்தரப்பின் வேலைத்திட்டத்தினால் நாட்டுக்கும் மக்களுக்கும் மீட்சி இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், தற்போதைய ஆளும்தரப்பு மக்களை வெல்ல வைப்போம் என்று கூறியதை மறந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை மக்கள் சார்பானதாக மாற்றியமைப்பதாகக் கூறிய தற்போதைய ஆளும்தரப்பு, அதற்காக மக்கள் தமக்கு வழங்கிய ஆணையைத் தூக்கி எறிந்துவிட்டு ரணில் விக்கிரமசிங்கவின் பாதையை பின்பற்றி வருகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வரிசூத்திரத்தை குறைப்பதாக வாக்குறுதி அளித்த ஆளும்தரப்பு இப்போது ஜஎம்எப் தாளத்துக்கு ஆடுகிறது. வரியை ☞ 8

### காரைதீவில் வெள்ளம் அடித்துச் சென்ற

## மாணவர்கள் 4 பேரின் சடலங்கள் நேற்று மீட்பு

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி சின்னப்பாலம் அருகில் உழவு இயந்திரம் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் காணாமல்போயிருந்த 6 மாணவர்களில் 4 பேரின் சடலங்கள்நேற்றுமீட்கப்பட்டன. காணாமற்போன ஏனைய இரு மாணவர்களையும் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிந்தவூர் பிரதேசத்தில் இருந்த மதுரசா ஒன்றிலிருந்து சம்பவதினமான செவ்வாய்க்கிழமை ☞ 8

## லஞ்சக் குற்றச்சாட்டு குறித்து மைத்திரியிடம் விசாரணை

### 2 மணி நேரமாக

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் செவ்வாய்க்கிழமை விசாரணை ஆணைக்குழு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆலோசகர்களின் வாகனங்களை திரும்ப ஒப்படைக்கப் பணித்து அவற்றை காலிமுகத் திடலில் நிறுத்தி வைத்து ஒரு 'ஷோ' காட்டியது. பின்னர் அவை முறையாகத் திரும்ப ஒப்படைக்கப்பட்ட வாகனங்களே என்று எதிர்ப்புக் குரல் எழும்பியதும் காலி முகத்திடலில் இருந்த அந்த வாகனங்கள் மறைந்தன.

அடுத்து, ரணிலின் ஆட்சிக் காலத்தில் வாகன இறக்குமதிக்குத் தடை இருந்தபோதும் களவாக வாகனங்களை உதிரிப் பாகங்கள் என்ற பெயரில் இறக்குமதி செய்து இங்கு வைத்து அவற்றைப் பொருத்தி சட்டவிரோதமாகப் பயன்படுத்துகிறார்கள் என்றொரு குற்றச்சாட்டுடனான காட்சிகள் ஓடின. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஹான் ரத்வத்த அவரது மனைவி என்று பலர் இந்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் புதிய ஆளும் தரப்பின் அமைச்சர்களுக்கு புதிய வாகனங்கள் ஏதும் வழங்கப்படாது என்றனர். கடந்த ஆட்சியில் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களே வழங்கப்படும் என்றும் அதிலும் எரிபொருள் சிக்கனம் மிக்க வாகனங்களே வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர். அரசு வசம் உள்ள எரிபொருள் விரயம் செய்யும் அதிசொகுசு வாகனங்களை விற்றுவிடப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த வாகனங்களை ஏலத்தில் விற்று அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலமாக ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வாகனங்கள் கொடுக்கப்போவதாகவும் கூறப்பட்டது. ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணி ஆற்றுவதற்கு வசதியாக இந்த வாகனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இடத்தில்தான் ஆளும் தரப்பு மாட்டிக்கொண்டது. அதிகாரத்துக்கு வந்ததும் வாகனங்களைக் கொண்டு தம்மை "வைத்துச் செய்த" ஆளும் தரப்பை "திருப்பிச் செய்வதற்குக்" காத்திருக்கின்றன எதிர்க் கட்சிகள். ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரச செலவில் வாகனங்கள் வழங்கப்பட்டால் அதற்கெதிராக நீதிமன்றங்களை நாட அவர்கள் இப்போதே தயாராகிவிட்டனர்.

தற்போதைய நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு அமைய ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கும் நடைமுறை இல்லை என்று அடித்துக் கூறும் எதிர்க் கட்சியினர், வரியில்லா வாகன இறக்குமதிக்கான உரிமம் வழங்குவதான் நடைமுறையில் உள்ளது என்றும் இதைத் தாண்டி ஆளும் தரப்பு சென்றால் அதைத் தடுத்து நிறுத்துவோம் என்கின்றன.

ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூடுதல் வாகனங்களை வழங்குவதன் மூலம் அரசின் செலவுகள் அதிகரிக்குமே தவிர குறையாது என்றும் அவர்கள் குமுறுகிறார்கள். இப்படி பொது மக்கள் நிதியை ஆளும்தரப்பு வீணடித்தால் அதற்கெதிராக தாம் நீதிமன்றத்தை நாடுவோம் என்று அவர்கள் இப்போது 'பிளேட்டை' திருப்பிப் போடுகிறார்கள்.

ஜேவிபி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் கட்சிக்கு எடுத்துக்கொண்டு தனது உறுப்பினர்களுக்குதானே கொடுப்பனவு வழங்கி வருகின்றது. அதனாலேயே சொந்த வாகனங்களை வைத்துச் செலவிடுவதற்கு ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதியில்லை. அதனைச் சமாளிக்கவே அரசு சார்பில் அவர்களுக்கு வாகனங்களை வழங்க ஆளும் தரப்பு முயற்சிக்கிறது. இது உண்மையில் அரசின் செலவைக் குறைப்பதற்குப் பதில் அதிகரிக்கத்தனர் செய்யும்.

ஆக மொத்தத்தில் வாகனத்தில் தொடங்கி வாகனத்திலேயே இப்போது மாட்டிக்கொண்டுள்ளது ஆளுங்கட்சி.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களும் அஞ்சலி செலுத்தினர். பல இடங்களிலும் கடுமையான மழை பெய்துகொண்டிருந்தபோதும் குடைகளைப் பிடித்துக்கொண்டு மக்கள் ஈகச் சுடர்களை ஏற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து மக்களின் விடுதலைக்காக தமது உயிர்களை ஈகஞ்செய்த போராளிகளை நினைவுகூர்ந்து நவம்பர் 27 மாவீரர் தினம் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்று வருகின்றது. போர் இறுதிக் கட்டத்தை அடைந்த 2009ஆம் ஆண்டு முதல் மாவீரர் தினங்களை நடத்துவது முடியாதகாரியமாகியிருந்த நிலையில் 2015இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ரணில் - மைத்திரி கூட்டு ஆளும்தரப்பின் காலத்தில் இந்த நிகழ்வுகளைப் பகிரங்கமாக நடத்துவதற்கான வெளி முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னரும் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு கடுமையான கெடுபிடிகளும் தடை ஆணைகளும் பெறப்படும் நிலையிருந்து வந்த நிலையில் இந்த வருடம் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை ஏற்படுத்துவதில்லை என்கிற கொள்கை முடிவை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு எடுத்ததன் மூலம் வடக்கு கிழக்கில் நிகழ்வு பேரெழுச்சியுடன் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மாவட்டங்களில் உள்ள முக்கிய நகரங்கள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன் மாவீரர் துயிலுமில்லங்களும் நினைவேந்தல் நடந்த இடங்களும்கூட சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டன. மாவீரர்களின் பெற்றோர்கள் முதன்மைச் சுடரை ஏற்ற, அரசியல்வாதிகள், உறவினர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஈகச்சுடர்களை ஏற்றினர்.

### முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் துயிலுமில்லவளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் பிரதான பொதுச் சுடரை மாவீரரின் தாயாரான வள்ளிபுனம் புஷ்பமலர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலிபரப்பாகியது. மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததுடன் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியினை செலுத்தி இருந்தனர்.

### அளம்பில்

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

சரியாக மாலை 06.05மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் பாலுவின் சகோதரியும், மாவீரர் லெப்ரினன்ட் பொன்னம்பலத்தின் மனைவியுமான கமலாதேவி ஏற்றிவைத்தார்.

சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டதுடன், மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை மேற்கொண்டனர்.

அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்று ஈகச்சுடரேற்றினார்.

### தேராவில்

முல்லைத்தீவு மாவட்டம், விசுவமாடு தேராவில் துயிலும் இல்லத்திலும் மாவீரர் நாள் சிறப்பு நிகழ்வுகள் பல நூற்றுக்கணக்கான மக்கள் குடை சூழ நடைபெற்றது. இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட வித்துடல்களின் உறவுகள் பதினைந்து வருடங்களின் பின்னர் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்து வந்து ஈகச் சுரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

### கொடிகாமம்

யாழ். மாவட்டம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாலை 6.05 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர் சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது.

பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை கந்தசாமி ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஏனைய தீபங்கள் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

### குடத்தனை

யாழ். மாவட்டம் வடமராட்சி கிழக்கு குடத்தனையிலும் மாவீரர்நாள் வெகுசிறப்பாக இடம்பெற்றது. இதில் முதல் நிகழ்வாக சிவப்பு மஞ்சள் கொடி ஏற்றப்பட்டது.

கொடியினை மாவீரர் றதிகலாவின் தந்தை கனகரத்தினம் ஏற்றியதை தொடர்ந்து பொதுச் சுடரினை வீரவேங்கை தொழில்வாயினியின் தாயார் இராசசுந்தரம் சின்னக்கிளி ஏற்றிவைத்தார்.

### சாட்டி

யாழ். மாவட்டம் தீவகம் சாட்டி துயிலும் இல்லத்தில் மாலை 6.05 மணி ஒலி எழுப்பப்பட்டு கரும்புலி மாவீரர் உட்பட மூன்று மாவீரர்களின் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களால் சுடர்களை ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர். நினைவுகற்களுக்கு மலர்மாலை அணியப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது

### உடுத்துறை

யாழ். மாவட்டம் உடுத்துறையில் அமைந்துள்ள துயிலி-ம் இல்லத்தில் மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டு பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. மாவீரனின் சகோதரன் ஒருவர் இந்தப் பிரதான சுடரை ஏற்றி வைக்க ஏனையோர் தமது உறவினருக்கான நினைவுச் சுடர்களை ஏற்றி மலர் தூவி, மலர் மாலை அணிவித்து கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தனர். கொட்டும் மழையிலும் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

### ஈச்சங்குளம்

வவுனியா மாவட்டம் ஈச்சங்குளத்திலும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதான ஈகச்சுடரை இரண்டு மாவீரர்களின் தாயாரான பாக்கியர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டன.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை படையினர் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் மாவீரர் தின நினைவேந்தல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இங்கு கடும் மழைக்கு மத்தியிலும் ஆயிரணக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலியினை செலுத்தியிருந்தனர்.

### வவுனியா நகரசபை மண்டபம்

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் தின நினைவேந்தல் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவீரர்களின் தாயார் இருவரினால் பொதுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் மாவீரர்களின் நினைவுருவ படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

### கிளிநொச்சி சமத்துவக் கட்சி

2024 மாவீரர் நாள் நிகழ்வை முன்னிட்டு கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் போராளி வேங்கை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை கப்டன் சிவரூபன், விரவேங்கை சிவரூபன், விரவேங்கை இளமயில் ஆகியோரின் தாயார் நடராசா சீலாவதி ஏற்றி வைத்தார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நேரில் சென்று பார்த்து தேவை அறிந்து உதவுக

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

தொழில்நுட்ப தகவல்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டுச் செயற்படமால் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ள பிரதேசங்களுக்குச் சென்று தகவல்களை பெற்றுக்கொண்டு, மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

அதற்காக கீழ் மட்டத்திலிருந்து வலுவான பொறிமுறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் நெற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைத்து தேவையான உணவு மற்றும் மலசலகூட வசதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அந்த மக்களுக்கு உதவி வழங்கத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக அதிக ஆபத்துள்ள வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் மனநிலை மற்றும் நெருக்கடிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அவசியம் ஏற்படும் பட்சத்தில் உயர்தர பரீட்சையை மேலும் காலம் தாழ்த்த நடவடிக்கை எடுக்குமாறும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அலோசனை வழங்கினார்.

தற்போது மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றிருக்கும் மீனவர்கள் தொடர்பில் தேடியறிந்து அவர்களை பாதுகாப்பாக கரை சேர்ப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் அறிவுறுத்தினார்.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாரநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவீ செனவிரத்ன, முப்படைகளின் பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, காலநிலை ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே.கருணாநாயக்க உள்ளிட்ட அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.

# 250 குளங்கள் வவுனியாவில் உடைப்பெடுக்கும் அபாயம்

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 29 குளங்கள் உடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட செயலாளர் திரு.பி.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

நீர்வரத்து அதிகரித்துள்ளதால், மாவட்டத்தில் உள்ள 250 குளங்கள் உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் 848 சிறிய மற்றும் பெரிய குளங்கள் உள்ளதாகவும் அவற்றில் 90 வீதமானவை நிரம்பி வழிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவமும், பேரிடர்மேலாண்மை பிரிவு அதிகாரிகளும் இணைந்து மணல் பைகளை இட்டு நிரப்பி குளங்களை உடைப்பிலிருந்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

குளங்கள் உடைப்பு மற்றும் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் 457 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு உரிய தரப்புக்களுடன் பேச்சில் ஈடுபடவுள்ளோம். சட்டவாக்கத்துறையால் இயற்றப்பட்ட தீர்மானத்தையே ஆணைக்குழு செயற்படுத்துகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து நாடாளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொதுத்தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் இம்மாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்குள் தாம் போட்டியிட்டத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் தமது பிரசார செலவுகளை குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தலில் வெற்றிபெற்ற மற்றும் வெற்றிபெறாத சகல வேட்பாளர்களும் தேர்தல் பிரசார செலவுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது குறித்த காலப்பகுதிக்குள் செலவு தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்காத தரப்பினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை சிறந்த முறையில் நடத்தி முடித்துள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கான தேவை காணப்படுகிறது.

அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள பின்னணியில் முதற்கட்டமாக காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்தி முடித்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த ஆண்டு நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் வாக்கெடுப்புக்கு 21 நாள்களுக்கு முன்னர் பல்வேறு காரணிகளால் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படாமல் பிற்போடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம்.

வேட்புமனுக்கள் தொடர்பில் ஆணைக்குழுவால் தனித்து தீர்மானம் எடுக்க முடியாது. சட்டவாக்கத்துறையால் இயற்றப்பட்ட தீர்மானத்தையே ஆணைக்குழு செயற்படுத்துகிறது.

ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து நாடாளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும். - என்றார்.

# 9 விமானங்கள் திருப்பப்பட்டன

26 ஆம் திகதி இரவு கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு தரையிறங்குவதற்காக வந்த 03 விமானங்கள் இந்தியாவின் மத்தள மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே குறித்த விமானங்கள் திருப்பி விடப்பட்டுள்ளன.

ஜப்பானின் நரிட்டா, டுபாய் மற்றும் சென்னையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைதந்த 3 விமானங்களே இந்தியாவிற்கு திருப்பிவிடப்பட்டுள்ளன என விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, சென்னை, மாலே மற்றும் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைதந்த மேலும் 3 விமானங்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு – கொழும்பு போக்குவரத்து பாதிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அந்தவகையில், மன்னம்பிட்டிய சந்தி (மகா ஓயா) வீதி உடைந்து காணப்படுவதால் மட்டக்களப்பு - கொழும்பு வீதி மூடப்பட்டுள்ளது.

அதேபோன்று, மன்னம்பிட்டி, வெலிகந்தை, புனாணை ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துக்காணப்படுவதால் அவ்வீதியூடாகவும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

புனாணை பகுதியில் ரயில் பாதையை குறுக்கறுத்து நீர் அதிகரித்துச் செல்வதால் மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவையும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

# சபாநாயகருக்கு அல் குர்ஆனின் சிங்கள பெயர்ப்பு



சபாநாயகர் அசோக்க ரன்வல செவ்வாய்க்கிழமை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைமையகத்துக்கு சென்று அங்கு உலமா சபை தலைவர் உள்ளிட்ட அங்கத்தவர்களுடன் கலந்துரையாடினர்.

கலந்துரையாடல்களின் பின் உலமா சபை தலைவர் சபாநாயகருக்கு அல் குர்ஆனின் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதியை கையளித்துள்ளார்.

# வவுனியாவில் மற்றொரு குளமும் உடைப்பெடுப்பு




வவுனியா அலைகல்லு போட்ட குளம் உடைப்பெடுத்ததால் மாளிகை குளத்திற்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக மாளிகை குளம் உடைப்பெடுக்குமாக இருந்தால் ஆறுமுகத்தான் புதுக்குளம், மாளிகை, சேமமடு கிராம மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் அப்பகுதி மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் கால்நடைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# நாவாந்துறையில் மக்களுக்கு உரும்பிராய் லயன்ஸ் உதவி







நாவாந்துறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இருக்கும் குடும்பங்கள் தொடர்பில் உரும்பிராய் லயன்ஸ் கழக தலைவர் லயன் மயூரதனால் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

லயன் மயூரதனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 40 குடும்பங்களிற்கு இரவு உணவிற்கான பாண் மற்றும் பருப்பு என்பன வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக இன்றும் லயன் மயூரதனால் உணவுப் பொருள்கள் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் பெண்ணின் சடலம் மீட்பு



பதுளை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் உள்ள சிறிய கால்வாயில் இருந்து நேற்று (புதன்கிழமை) காலை பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் பதுளை நகரத்தில் வசிக்கும் 55 வயதுடைய பெண்ணொருவர் ஆவார்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புரிந்துகொள்ளுதலின் முக்கியத்துவம்

கடந்த 15 வருடங்களில் இல்லாத வகையில் மாவீரர் தினம் இம்முறை வடக்கு கிழக்கில் பெரும் எழுச்சியுடனும் இடையூறுகள் அச்சுறுத்தல்கள் அச்சம் இன்றி நிகழ்ந்துள்ளது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தியதற்காக தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். எமக்காக உயிர் நீத்தவர்களை நினைவேந்துவது எமது உரிமை என்றபோதும், அதை யாரும் தடுக்க முடியாது என்கிறபோதும் அதைச் செய்வதற்கான சுதந்திரவெளியை ஏற்படுத்துவதற்கு ஒரு புரிந்துணர்வு அவசியம்.

இந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக தமிழ் மக்கள் தமது அரசியல் போக்கில் நிறையவே போராட்டங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். இறுதிப்போரில் கொல்லப்பட்ட பொது மக்களை நினைவேந்துவதற்கான மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சுடர் ஏற்றுவதற்கு முதன் முதலில் எடுக்கப்பட்ட ஒவ்வொரு நகர்வும் நினைவுக்கு வருகின்றது. நல்லை ஆதீனத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட அந்த நிகழ்வை தடுப்பதற்காக ஆதீனத்திற்கு எவரையும் செல்ல விடாது மறித்து தனது படைப் பலத்தை நிலைநிறுத்திய அரசியல் கள நிலையில் இருந்து படிப்படியாகத்தான் இன்றைய நிலைக்கு வர முடிந்திருந்திக்கிறது.

இந்தநிலையைவந்தடைய 15 வருடங்கள் எடுத்திருக்கின்றது என்பதைப் போலவே இரு தரப்புக்களிலும் அதற்கான மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. மாவீரர் தின நிகழ்வாக இருந்தாலும் அவை இன்று புலிகளின் அடையாளம் அற்ற, மக்களுக்காக தம்மை ஈகம் செய்த தியாகிகளின் நிகழ்வுகளாகவே பரிணாம மாற்றம் பெற்றுள்ளன. 2015இல்தான் முதல் முதலில் மாவீரர் தின நிகழ்வுகளை பகிரங்கமாக துயிலும் இல்லங்களில் நினைவேந்த முடிந்தது. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அங்கு கூட முடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளும் தரப்புக்கு ஆதரவு தெரிவித்து எடுத்த அரசியல் மாற்றம் காரணமாக அது நிகழ்ந்தது. ரணில் –மைத்திரி ஆட்சிக்கு முதுகெலும்பாகத் தன்னை நிலைநிறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவு மாவீரர் நினைவேந்தல்களில் ஒரு கட்டத்தை அடைவதற்கான வழியை ஏற்படுத்தியது. இன்று தமிழ் மக்கள் நேரடியாகவே ஆளும் தரப்பை ஆதரிக்க எடுத்த முடிவு அந்த நிகழ்வுகளை தடைகளற்ற அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வுகளாக மாற்ற வழியை ஏற்படுத்தியுள்ளது.

இன்று ஆளும் தரப்பாக இருக்கும் ஜேவிபிக்கும் இந்த நினைவேந்தல்களைப்புரிந்துகொள்வதுகடினமானதில்லை. இந்தப் பாதையில் அதுவும் நீண்ட தூரம் பயணித்து வந்திருக்கின்றது. இந்தத்துயரங்களையும்துன்பங்களையும் அதுவும் ஒரு காலத்தில் அனுபவித்திருக்கின்றது. அது குறுகிய காலம் எனிலும், விரைவிலேயே அதற்கான வெளி திறக்கப்பட்டுவிட்டது என்றாலும் அந்த உணர்வைப் புரிந்துகொள்ளும் திறனை அது கொண்டிருந்தது இன்றைய சூழலுக்கான முக்கியமான காரணம்.

இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இது தொடரவும் வேண்டும். இந்த அடிப்படைப் புரிதல் இந்த விடயத்தில் மட்டுமல்லாமல் அரசியல் தீர்வு விடயத்திலும் தொடரவேண்டும். தமிழ் மக்கள் தமக்கான ஓர் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக தமது இறைமையை தாமே பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுவதற்காக கடந்த 70 வருடங்களாக நடத்தி வரும் போராட்டத்தின் ஒரு இடைவிளையே மாவீரர் தினம், அது இன்று எப்படி ஓர் நல்லிணக்கத்திற்கான நல்லறிகுறியாக மாறி இருக்கின்றதோ அதேபோன்று அரசியல் அதிகாரப் பகிர்விற்கான வழிகளையும் இந்தப் புரிதல் ஏற்படுத்தவேண்டும். அதுவே மக்களின் விருப்பமும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கான பாதையும் கூட.



## "தாக்கு அவர்களை!" உக்ரைன் போரில் மாற்றத்தைக் கொண்டுவருமா?

**மோ. ரூபன்**

உக்ரைன்- - ரஷியா இடையிலான போர் ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஏதோ, பழைய காலத்து திரைப்படம் போல, போர் இப்போது வெற்றிகரமாக ஆயிரம் நாள்களைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் உக்ரைன் போரில் இப்போது திடுக்கிட வைக்கும் பல புதுப்புது திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதுநாள் வரை இல்லாத அளவுக்கு, இந்த திடீர் திருப்பங்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டது ஒரு நவீன ரக ஏவுகணை. அதன் பெயர் ஏ.டி.ஏ.சி.எம்.எஸ். 'அட்டாக்கம்ஸ்' (தாக்கு அவர்களை!) என்பது இந்த ஏவுகணையின் செல்லப் பெயர்.

அமெரிக்காவில் வெள்ளை மாளிகையைப் பூட்டி சாவியை புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப்பிடம் தந்துவிட்டுப் போக வேண்டிய ஜோ பைடன், இந்த நவீன ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைன் நாட்டுக்கு அனுமதி தந்ததுதான் புதிய திருப்பங்களுக்குக் காரணம்.

உக்ரைன் போர் தொடங்கிய நாள் முதலே உக்ரைன் நாடு பல மேற்கத்தியத் தயாரிப்பு ஏவுகணைகளைப் போரில் பயன்படுத்தி வருகிறது. ஆரம்பத்தில் 165 கிலோ மீட்டர் (100 மைல்) தொலைவு வரை பாயக்கூடிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தியது. டிரோன்களையும் அதிகளவில் போரில் ஈடுபடுத்தியது. ரஷியாவின் தலைநகரமான மாஸ்கோகூட ஒருமுறை உக்ரைன் நாட்டின் டிரோன் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

ஏவுகணைகள் வரிசையில் அடுத்தகட்டமாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் கூட்டுத் தயாரிப்பான, ஸ்கால்ப் எனப்படும் ஸ்டார்ம் ஷேடோ ஏவுகணைகள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டன. ஸ்கால்ப் எனப்படும் ஸ்டார்ம் ஷேடோ ஏவுகணை, 250 கிலோ மீற்றர் அதாவது 155 மைல் தொலைவு வரை பாயக்கூடியது. ரஷியாவின் குர்ஸ்க் பகுதி, டான் ஆற்றின் மீது அமைந்துள்ள ரோஸ்டோவ் நகரம், மில்லரோரா உள்பட பல ரஷிய நகரங்கள் இப்போது இந்த ஏவுகணையின் தாக்குதல் வளையத்துக்குள் உள்ளன.

இந்தநிலையில்தான், இன்னும் புது வரவாக 2022 ஜூலையில், 'அட்டாக்கம்ஸ்' எனப்படும் ஏ.டி.ஏ.சி.எம்.எஸ். ஏவுகணை உக்ரைனுக்கு வழங்கப்பட்டது. அமெரிக்கத்தயாரிப்பு ஏவுகணையான அட்டாக்கம்ஸ் 306 கிலோ மீற்றர் (190 மைல்) தொலைவுக்குப் பாயக்கூடியது.

ஆக, இது கிட்டத்தட்ட ரஷியாவின் தலைநகரமான மாஸ்கோவை நெருங்கக்கூடியது. அட்டாக்கம்ஸ் ஏவுகணையை இரண்டு வகையாகப் பயன்படுத்த முடியும். ஒன்று 225 கிலோ எடையுள்ள ஒற்றைக் குண்டைப் பொருத்தி எதிரியின் தளத்தைத் தாக்கி, பெருத்த சேதத்தை ஏற்படுத்தலாம். அல்லது கிளஸ்டர் எனப்படும் கொத்துக்குண்டுகளை இந்த ஏவுகணையில் பொருத்தியும் தாக்குதல் நடத்தலாம். இந்த கொத்துக்குண்டுகளில் சில உடனடியாக வெடிக்கும். சில குண்டுகள் வெடிக்காமல் கிடந்து தவணைமுறையில் காலத்துக்குக்காலம் அவ்வப்போது மறைந்திருந்து வெடித்து களேபரத்தை ஏற்படுத்தும்.

மிகப்பெரிய பரப்பிலான விமானப்படைத் தளங்கள், ராணுவ முகாம்கள், போர்க் களங்களில் ஏ.டி.ஏ.சி.எம்.எஸ். ஏவுகணையைப் பயன்படுத்தி பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்த முடியும். 1991ஆம் ஆண்டு ஈராக் நாட்டுக்கு எதிரான வளைகுடா போரிலும், லிபியாவுக்கு எதிரான போரிலும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட ஏவுகணை இது. வித்தியாசமான அதிவேகத்தில் வித்தியாசமான கோணத்தில் அட்டாக்கம்ஸ் பாயக்கூடியது. அதனால் இதை இடைமறித்து சுட்டுவீழ்த்துவது கடினம்.

சரி, 2022இல் உக்ரைனுக்கு வழங்கப்பட்ட இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தியிருக்கிறதா? அமெரிக்கா இந்த ஏவுகணைகளை உக்ரைனுக்கு ஏற்கெனவே தந்திருந்தாலும், இந்த ஏவுகணைகளை வைத்து ரஷிய நிலப்பரப்பில் தாக்குதல் நடத்த அமெரிக்கா தடை விதித்திருந்தது. இந்த நிலையில், ரஷியாவின் ஆக்ரமிப்பில் உள்ள கிரிமியா தீபகற்ப பகுதியில், கடந்த ஏப்ரல் மாதம், உக்ரைன் இரண்டு முறை இந்த ஏவுகணையைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியிருக்கிறது. கிரிமியா என்பது உக்ரைனின் நிலப்பரப்பு என்ற ஹோதாவில் நடத்தப்பட்ட தாக்குதல் அது.

'இந்த நிலையில், அட்டாக்கம்ஸ் ஏவுகணை மீதான தடையை நீக்கி, இனி ரஷிய நிலப்பரப்பின் மீதும் இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்க அதிபர் இசைவு வழங்கியதுதான் பரபரப்புக்கான ஆரம்ப காரணம்.

அமெரிக்காவின் இந்த முடிவை உக்ரைன் அதிபர் வோளோடிமிர் ஜெலன்ஸ்கி வரவேற்றிருந்தார். "சொற்களால் தாக்குதல் நடத்த முடியாது. இந்த ஏவுகணைகள் தங்களுக்காக தாங்களே பேசக்கூடியவை" என்று அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். இதற்கு மறுபுறமாக ரஷியத் தரப்பு, இந்த ஏவுகணை அனுமதிக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷிய நிலப்பரப்பைத் தாக்க அமெரிக்கா அனுமதி அளித்ததை அடுத்து, அதன் எதிர்வினையாக, உக்ரைனுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பயன்படுத்த அதிரடியாக அனுமதி அளித்து அதிர வைத்தார் ரஷிய அதிபர் புதின்.

அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளை அமெரிக்க வல்லுநர்களின் உதவியில்லாமல் உக்ரைன் ராணுவத்தால் இயக்க முடியாது என்ற நிலையில், "அமெரிக்க ராணுவக் கூட்டமைப்பான நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகள், ரஷியாவுடன் இனி நேரடி போரில் ஈடுபடுவதாகப் பார்க்கப்படும்" என்றும் புதின் உறுமியிருந்தார்.

ரஷிய செய்தி நிறுவனமான டாஸ், இந்த ஏவுகணை பிரச்னையை, ''மூன்றாம் உலகப் போரைத் தொடங்கி வைப்பதற்காக எடுத்து வைக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய அடி'' என்று வர்ணித்தது. "நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் மிக விரைவில் கடும் வலியை உணர்வார்கள்'' என்று ரஷிய நாளிதழான ரோசியாஸ்கயா காஸெட்டி எச்சரித்தது.

அமெரிக்காவின் புதிய அதிபராகப் பொறுப்பேற்க உள்ள டொனால்ட் டிரம்ப் இதுபற்றி எதுவும் கருத்து கூறாத நிலையில், ஜூனியர் டிரம்ப் இதுபற்றி கருத்து தெரிவித்திருந்தார். "அமெரிக்க ராணுவ கட்டமைப்பான பெண்டகன் எடுக்க வேண்டிய முடிவு இப்போது ராணுவத் தொழில்துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாம் உலகப்போர் ஏற்படவாய்ப்பிருக்கிறது" என்று அவர் எச்சரித்திருந்தார்.

இதுவரைகாலமும் அமெரிக்கத்தயாரிப்பு அல்லாத கொஞ்சம் மென்மையான ஏவுகணைகளையே உக்ரைன் போரில் பயன்படுத்தி வந்த நிலையில், தற்போது முதன் முறையாக அமெரிக்கத் தயாரிப்பு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# "தாக்கு அவர்களை!" உக்ரைன் போரில் மாற்றத்தைக் கொண்டுவருமா?

4ம் பக்கத் தொடர்ச்சி..........

அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷியா மீது சுடச்சுட ஒரு தாக்குதலை உக்ரைன் நடத்தியிருக்கிறது. ஸ்டார்ம் ஷேடோ ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்குப் பதிலடியாக வரலாற்றில் முதன்முறையாகக் கண்டம் விட்டு கண்டம் பாயும் 9 ஐ.சி.பி.எம். ரக ஏவுகணைகள் மூலம் உக்ரைன் மத்தியப் பகுதி நகரமான நிப்ரோவை ரஷியா தாக்கியிருக்கிறது. ரஷியாவின் அஷ்ட்ரக்கான் பகுதியிலிருந்து இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன. இவை அணுக்குண்டுகளைத் தாங்கிச் செல்லக்கூடிய ஏவுகணைகள் என்றாலும் அணுக்குண்டுகளுக்குப் பதிலாக மரபார்ந்த வெடிகுண்டுகளைப் பொருத்தி ரஷியா தாக்குதல் நடத்தியிருக்கிறது.

கூடவே தம்போவ் பகுதியில் பறந்த ஒரு மிக்-31கே போர் விமானத்திலிருந்து ஒலியை மிஞ்சும் வேகத்தில் பாயக்கூடிய ஏழு கேஎச் 47 எம்2 ரக ஏரோ பலிஸ்டிக் ஏவுகணைகளையும், கேஎச்-101 ரகத்தைச் சேர்ந்த 7 குரூய்ஸ் ரக ஏவுகணைகளையும் ரஷியா பயன்படுத்தித் தாக்குதல் தொடுத்திருக்கிறது.

இவற்றில் குரூய்ஸ் ரக ஏவுகணைகளில் சிலவற்றை மட்டும் உக்ரைன் இடைமறித்து சுட்டு வீழ்த்தியிருக்கிறது. மற்றபடி ஐ.சி.பி.எம். ஏவுகணைகள் மூலம் நிப்ரோ நகரத்தில் ஏற்பட்ட சேதவிவரம் வெளிவரவில்லை. இதனிடையே, ரஷியா ஐ.சி.பி.எம். ரக ஏவுகணைகள் எதையும் பயன்படுத்தவில்லை. ஆர்.எஸ்.-26 : ரூபெஸ் என்ற இடைத்தொலைவு பலிஸ்டிக் ஏவுகணையைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியிருக்கிறது என மேலை நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. ஆனால், ஆர்.எஸ்.-26:ரூபெஸ் ஏவுகணைகளும் அணுகுண்டுகளைத் தாங்கிச் செல்லக்கூடிய அதிதிறன் வாய்ந்த ஏவுகணைகள்தான்.

சரி, "உக்ரைன் தற்போது அமெரிக்கத் தயாரிப்பு அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளைப் போரில் பயன்படுத்துவதால் போரில் ஏதேனும் பெரிய மாற்றம் வருமா? இதனால் மூன்றாம் உலகப் போர் மூள வாய்ப்புண்டா?'' என்றால் இல்லை என்கிறார்கள் போரியல் வல்லுநர்கள்.

''ரஷியா அதன் விமானப்படைத் தளங்கள், ஆயுத தளவாடங்களை ஏற்கெனவே உக்ரைனுக்கு அப்பால், இந்த ஏவுகணை தொட முடியாத தொலைவில் கொண்டுபோய் வைத்திருக்கிறது. அட்டாக்கம்ஸ் ஏவுகணை மூலம் ரஷியாவின் விமானத் தாக்குதல்களைக் கொஞ்சம் குறைக்கலாம். ரஷியாவுக்கு சற்று செலவை அதிகப்படுத்தலாம். ஆனால் உக்ரைன் போரில் ரஷியாவை இந்த ஏவுகணையால் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த முடியாது'' என்கிறார்கள் வல்லுநர்கள்.

''ஒருவேளை இந்த ஏவுகணைகள் உக்ரைன் போரில் சிறிய மாற்றத்தைக் கொண்டு வரலாமே தவிர, உக்ரைனுக்கு வாய்ப்பாகப் போரைத் திசைதிருப்ப இந்த நவீன ஏவுகணையால் முடியாது'' என்ற கருத்தும் போரியல் வல்லுநர்களிடம் உள்ளது.

"உக்ரைனுக்கு எத்தனை அட்டாக்கம்ஸ் ஏவுகணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியவில்லை. அது தெரிந்தால்தான் போரில் இந்த ரக ஏவுகணை எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூற முடியும். தவிர, இந்த ஏவுகணையை ஆரம்பத்தில் தந்திருந்தால் உக்ரைன் போர் ஒருவேளை திசைதிரும்பியிருக்கும். ஆனால் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி இந்த ஏவுகணை தரப்பட்டிருக்கிறது" என்ற கருத்தும் இருக்கிறது.




''போர் என்பது தனித்தனி துண்டுகளைப் பொருத்தி ஒன்றாகச் சேர்க்க வேண்டிய ஒரு புதிர் விளையாட்டு. அந்த புதிர் விளையாட்டில் மிக நீண்ட தொலைவு பாயும் ஏவுகணை என்பது ஒரு சிறிய துண்டுதான். அதை மட்டுமே வைத்து போரில் வெற்றி பெற்றுவிட முடியாது'' என்பது இன்னும் சிலரின் கணிப்பாக இருக்கிறது.

சரி, இந்த ஏவுகணையை வைத்து உக்ரைன் வருங்காலத்தில் என்ன செய்யப் போகிறது?

கடந்த ஒகஸ்ட் மாதம் ரஷியாவின் குர்ஸ்க் பகுதிக்குள் உக்ரைன் ராணுவம் அதிரடியாகப் புகுந்து ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பகுதியைக் கைப்பற்றி வைத்திருக்கிறது. அந்த குர்ஸ்க் பகுதியை மீட்க 50 ஆயிரம் ராணுவ வீரர்களை ரஷியா களமிறக்கி விட்டுள்ளது. இவர்களில் 12 ஆயிரம் பேர் வடகொரிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இந்த குர்ஸ்க் பகுதி மீதும் வடகொரிய ராணுவத்தின் மீதும் உக்ரைன், அமெரிக்க அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளை அதிகமாகப் பயன்படுத்தலாம் என்று தெரிகிறது. கிரிமியா தீபகற்பத்தையும், ரஷியாவையும் இணைக்கும் கெர்ச் பாலத்தையும் இந்த ஏவுகணையை வீசி உக்ரைன் தகர்க்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

நேட்டோ நாடுகளின் உதவியின்றி உக்ரைனால் தனித்து இந்த அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளை இயக்க முடியாது என்ற நிலையில், இந்த ரக ஏவுகணையை ரஷியாவுக்கு எதிராக உக்ரைன் தொடர்ந்து பயன்படுத்தினால், அது நேட்டோ நாடுகள் ரஷியாவுடன் நேரடி மோதலில் ஈடுபடுவதற்குச் சமம். அதன்மூலம் ஒருவேளை பதற்றம் அதிகமாகி மூன்றாம் உலகப்போர் வெடிக்கவும் கூட வாய்ப்பு இருக்கிறது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல் மீள்விசாரணைக்கு கத்தோலிக்க ஆயர் பேரவை வரவேற்பு

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த விசாரணைகள் சாதகமான விதத்தில் இடம்பெறுவதாக தெரிவித்துள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவை எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிவடையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சிஐடியினர் முன்னெடுக்கும் விசாரணைகளில் சில சாதகதன்மைகளை அவதானித்துள்ளதாக கத்தோலிக்க ஆயர்பேரவையின் பேச்சாளர் ஜூட் கிறிசாந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ, விக்கிரமசிங்க அரசாங்கங்கள் அலட்சியம் செய்த சில விடயங்கள் குறித்து சிஐடியினர் தற்போது கவனம் செலுத்துகின்றனர் என தெரிவித்துள்ள அவர், உதாரணத்திற்கு சனல் 4 ஆவணப்படத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட தனிநபர்களை தற்போது விசாரணைக்கு அழைக்கின்றனர். அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதனையே நாங்கள் எதிர்பார்த்தோம், இதேயளவு அர்ப்பணிப்புடன் இந்த நடவடிக்கைகள் தொடரும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதை நாங்கள் விரும்பவில்லை, குண்டுத் தாக்குதலை திட்டமிட்டவர்கள் அனைவருக்கும் எதிராகவும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கத்தோலிக்க ஆயர்பேரவையின் பேச்சாளர் ஜூட் கிறிசாந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

விக்கிரமசிங்க குழுக்களை அமைத்து அறிக்கைகளை கோரினார் என தெரிவித்துள்ள அவர், அறிக்கைகளை மாத்திரம் கோருவதில் அர்த்தமில்லை, கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், இன்று நாங்கள் முன்னேற்றகரமான விடயங்களை காண்கின்றோம், விசாரணைகளை இரகசியமாக முன்னெடுத்த பின்னர் எங்களிற்கு அறிவிப்பதை விட அரசாங்கம் அனைத்தையும் வெளிப்படையான விதத்தில் செய்யவேண்டும், விசாரணை முடிவுகள் குறித்து பொதுமக்களிற்கு தெரியப்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடும் கொந்தளிப்பில் முல்லைத்தீவு கடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடல் என்றுமில்லாதவாறு கொந்தளிப்பு நிலைமையுடன் காணப்படுகிறது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கிழக்கில் இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது புயலாக மாறி வடக்கை நோக்கி நகர்ந்து வருகிறது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொக்கணை, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு கடல்பரப்புகள் என்றுமில்லாதவாறு கடும் கொந்தளிப்பாக காணப்படுகின்றன.

இந்நிலையில் கடற்கரை பகுதிகளில் உள்ள மீனவர்கள் தொழிலுக்கு செல்லாமல் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் இருந்து பயணித்த ஸ்ரீலங்கன் விமானத்தில் திருட்டு

## சந்தேகநபர் கைது

லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்திலிருந்த அலுவலக உதவியாளர் ஒருவரின் கைப்பையை திருடிய கணக்காளர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கனடாவில் கணக்காளராகக் கடமையாற்றும் யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடையவர் ஆவார்.

14 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான 2,700 பவுண் நகைகள் மற்றும் 04 கையடக்கத் தொலைபேசிகள் அடங்கிய கைப்பையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இங்கிலாந்தில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் கொழும்பு பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவர் லண்டனில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது தனது கைப்பை திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் இது தொடர்பில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானச் சேவையின் அதிகாரிகளிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானச் சேவையின் அதிகாரிகள் இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர் இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததையடுத்து விமான நிலைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட கைப்பையில் இருந்த பொருள்கள் விமான நிலைய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று (புதன்கிழமை) நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# மன்னா கத்தியால் தாக்கப்பட்டு களுத்துறையில் ஒருவர் கொலை

களுத்துறை பிரதேசத்தில் மன்னா கத்தியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, வெனிவெல் கெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ஜயகொடி ஆராச்சிலாகே சுகத் என்ற நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவீரர் நாளையொட்டி புதுக்குடியிருப்பில் வர்த்தக நிலையங்களை மூடி முழு ஆதரவு

புதுக்குடியிருப்பில் வர்த்தக சங்கத்தினர் அனைத்து கடைகளையும் பூட்டி நேற்று (புதன்கிழமை) மாவீரர் நாளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஆதரவு வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள அனைத்து கடைகளையும் பூட்டி யுத்தத்தில் உயிர் நீத்த மாவீரர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவதற்காக ஆதரவு வழங்கியுள்ளனர் என புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் தர்மலிங்கம் நவநீதன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அனைத்து கடைகளும் பூட்டப்பட்டு நேற்று மாலை அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகி இருக்கின்றன.










# நாடாளுமன்றை வலுப்படுத்தும் பொறுப்பு சபாநாயகரின் கரங்களிலேயே உள்ளதாம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறுகிறார்



புதிய சபாநாயகர் நாடாளுமன்றத்தை வலுப்படுத்தவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார். புதிய சபாநாயகரை சந்தித்தவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பலவீனமான நிலையில் நாடாளுமன்றத்திற்கு புத்துயிர் அளிக்கும் பணி சபாநாயகர் அசோக ரண்வலவின் கரங்களில் உள்ளது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்

காலைக்கதிர் Kalaikkathir

# சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்காணிக்க விமானப் படையினர் களத்தில்



சீற்ற வானிலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்காணிக்க விமானப்படை தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை



மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, நேற்று (புதன்கிழமை) விமானப்படையின்இல07ஆம்படைப்பிரிவை சேர்ந்த பெல் 212 ஹெலிகொப்டர் அம்பாறை பகுதிக்கு கண்காணிப்புக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின் போது ஏறாவூர் மைலவட்டவான் பிரதேசத்தில ;வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் இருந்த ஒருவர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு விமானப்படை தளத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.

## யாழ். மாவட்டத்தில் கனமழை 19 ஆயிரத்து 200 பேர் பாதிப்பு

சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 ஆயிரத்து 545 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 200 பேரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் யாழ்ப்பாணம்மாவட்டபிரதிப்பணிப்பாளர் டிஎன் சூரியராஜா தெரிவித்தார்.

தொடர் மழை காரணமாக தாழ்நில பிரதேசங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களை அண்டி வாழும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்இந்தசீற்ற காலநிலை காரணமாக 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்த நிலை ஏற்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, நல்லூர், தெல்லிப்பழை , சங்கானை, காரைநகர், கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், உடுவில், நெடுந்தீவு, கரவெட்டி, வேலணை, மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுகளில் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். - என்றார்.



# மோ.சைக்கிள் – வான் மோதிக் கோர விபத்து

## ஒருவர் படுகாயம்



அகலவத்தை - பெலவத்தை வீதியில் கெவிடியாகல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிள் முற்றிலும் சேதமடைந்துள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

## வடக்கு....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனையசுடர்களைஇரண்டாம்லெப்டினன் பாபுவின் தந்தை இராமையாவும் கப்டன் வண்ணனின் தந்தை விஜயசேகரமும் ஏற்றி வைத்தனர்.

### வாகரை

மட்டக்களப்புமாவட்டம்வாகரைகண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமான பெரும் நிகழ்வாக நடைபெற்றது.

பெருமளவான மாவீரர்களின் உறவினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. சரியாக 6.10 மணியளவில் பிரதான சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் பாடலஷ் இசைக்கப்பட்டதுடன் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இந்த மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு மக்களோடு மக்களாக நின்று தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

### மாவடிமுன்மாரி

வெள்ளப் பேரிடருக்கு மத்தியிலும் மட்டக்களப்பு மாவட்டம் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுஈகச்சுடர்ஏற்றிஅஞ்சலிசெலுத்தினர்.

இந்நிலையில்மட்டக்களப்புமாவட்டத்தின் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் அதிகளவான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் 2ஆம் லெப்பினட் தங்கநிலாவின் தாயார் கிருஷ்ணபிள்ளைபுண்ணியவதிபொதுச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து இரண்டாயித்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் மாவீர்ரகளின் பெற்றோர் கலந்துகொண்டு தீபங்களை ஏற்றி அஞ்சலி செய்தனர்.

### மன்னார் ஆட்காட்டிவெளி

மன்னார் மாவட்டம், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவு தினம் இடம்பெற்றது.

ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக்குழுவினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்தேசியவிடுதலைக்காகதம்உயிரை தியாகம் செய்த இரு மாவீரர்களின் தந்தை பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### கஞ்சிகுடிச்சாறு

அம்பாறைமாவட்டம்திருக்கோவில்பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது.

மாலை6.05நிமிடத்தில்மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. நினைவேந்தலுக்காகச் சென்ற மக்களிடம் இங்கு மட்டும் பொலிஸார் பாதுகாப்பு கெடுபிடிகளை மேற்கொண்டனர். நினைவேந்தலுக்காகச் சென்றவர்கள் பயணித்த வாகனங்களின் இலக்கங்கள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. அதன் பின்னரே மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமார் இந்தத் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தினார். அவருடனும் பொலிஸார் முரண்பட்டனர். இதனால் அங்கு சிறு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அம்பாறைமாவட்டத்தில்உள்ளஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்திலேயே அமைந்துள்ளது.

700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் வித்துடலகள் இங்கு விதைக்கப்பட்டுள்ளன.

### ஆலங்குளம்

திருகோணமலை மாவட்டம் சம்பூர் ஆலங்குளம் துயிலும் இல்லத்திலும் சரியாக 6.05 மணிக்கு ஈகச் சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது.

பொதுச் சுடரை மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்றி வைத்தார். சீரற்ற காலநிலையினையும் பொருட்படுத்தாது பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது தமிழர்களின் விடிவிற்காக உயிர்தியாகம்செய்தமாவீர்கள்விதைக்கப்பட்ட கல்லறைகள்மீது அவர்களது உறவினர்கள் மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியதுடன் கண்ணீர் மல்கி கதறி அழுது தமது கவலைகளையும் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியதை காண முடிந்தது.

### சிவாஜிலிங்கம் அஞ்சலி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை0ன் முன்னாள் உறுப்பினருமான சிவாஜிலிங்கம் வழக்கம் போன்றுபல்வேறுஇடங்களிலும்ஈகச்சுரேற்றி நேற்று பகல் மாவீரர் நினைவேந்தலில் ஈடுபட்டார்.

நவம்பர் 27 இல் தேசிய நினைவெழுச்சி நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கு காரணமாக இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் மாவீரான லெப்டினன்ட் சங்கர் என அழைக்கப்படும் செல்வச்சந்திரன் சத்தியநாதனின் கம்பர்மலையில் உள்ள பூர்வீகஇல்லத்துக்குமுன்பாகஇன்றுபகல்ஈகச் சுடரேற்றி அவர் அஞ்சலி செய்தார். சங்கரின் அன்னையும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறைரேவடி கடற்கரையில் கடற்புலி மாவீரர்களுக்காக அவர் சுரேற்றி அஞ்சலி செலுத்தினார். தியாகி திலீபனின் நினைவிடம், கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம் முன்னால், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்திருக்கும் 522ஆவதி படைப்பிரிவு தலைமையகம் முன்னால், நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்னால், எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்துள்ள படை முகாம் முன்னால்என்று சிவாஜிலிங்கம்ஈகச்சுரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

## கோப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குழுக்களுக்கான பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நால்வரும் அடங்குகின்றனர்.

தெரிவுக்குழுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை சபாநாயகர் டிசெம்பர் 3 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அன்றைய தினம் பிற்பகல் தெரிவுக்குழு கூடி குழுக்களை எவ்வாறு நியமிப்பது என்பது குறித்துதீர்மானிக்கும்எனத்தெரிவிக்கப்பட்டது.

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை சம்மாந்துறை பிரதேசத்தை நோக்கி 11 மாணவர்களுடன் பயணித்த உழவு இயந்திரம் மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் வீதியைவிட்டு விலகி தடம்புரண்ட விபத்திற்குள்ளானதையடுத்து வெள்ள நீரில் மூழ்கியது. அதிலிருந்த 5 பேர் காப்பாற்றப்பட்டனர். 6 மாணவர்கள் மற்றும் சாரதி, உதவியாளர்உட்பட8பேர்நீரில்அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர்.

கடற்படையினரின் உதவியுடன் நடந்த தேடும் நடவடிக்கையின் போது 4 மாணவர்களின் சடலங்கள் மட்டுமே கிடைத்தன. இரு மாணவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

உ-ழவு இயந்திர சாரதியும் அவரது உதவியாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இன்றுஅவர்நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மின்சாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்.

அவரை உடனடியாக தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அவரைக் காப்பற்ற முடிந்திருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், அதற்கு ஆணைக்குழு தயாராக இருப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து

# அடுத்த தவணை கடன் கிடைக்க 4 மாதமாகும்

இலங்கைக்கான சர்வதேசநாணய நிதியத்தியத்தின் அடுத்த தவணைக் கடன் கிடைப்பதற்கு இரண்டரை மாதங்கள் தாமதம் ஏற்படும் என தொழிலாளர் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அடுத்த தவணை சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரும் ஏப்ரல் மாதத்தில்தான் கிடைக்கும் என்று பேராசிரியர் எதிர்பார்க்கின்றார். இந்தத் தொகை ஜனவரி நடுப்பகுதியில் கிடைக்கும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்ட போதிலும், இலங்கையின் அடுத்த வரவு செலவுத் திட்டத்தை பார்த்த பின்னரே அடுத்த தவணைக் கடனை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகரிக்கும் என்பதை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

வரவு செலவுத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் திருப்தியடையும்போதே நான்காவது தவணைக் கடன் கிடைக்கும் என்பது அமைச்சரின் கணிப்பு.

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பது மட்டுமன்றி, வரி வலையில் சிக்காதவர்களை இணைத்து, வரி வசூலை திறம்படச் செய்து, நாட்டை டிஜிட்டல் மயமாக்குவது மட்டுமே வருமானத்தை அதிகரிக்க ஒரே வழி.

மின்சாரக் கட்டணம் குறைவதால் எண்ணெய் விலையும் குறையும் என்று கூறப்பட்டாலும் அது நடக்கவில்லை. தற்போதையஆளும்தரப்புதேர்தல்மேடையில் சொன்னதைச் செய்வதில்லை.

புதிய வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்காமலேயே ஆளும்தரப்பு எதிர்காலம் குறித்து சிந்திக்க முடியும் எனவும், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர,தற்போதையஅரசாங்கம்வாக்குறுதிகளை அமுல்படுத்துவதற்கான திட்டங்களைக் கூட தயாரிக்கவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 80 பேர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறவில்லை என்றும் விரைவில் அவர்களும்வெளியேறிவிடுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை ஒதுக்கும் பணி டிசெம்பர் 3 முதல் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து நாற்பது கிலோ மீற்றர்களுக்குள் சொந்த வீடுகள் இல்லாத தொலைதூர மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல தொகுதியில் இருந்து வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

மாதிவேலஎம்பிஉத்தியோகபூர்வவீட்டுத் தொகுதியில் சுமார் 110 வீடுகள் உள்ளன.

## லஞ்சக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்தது.

ரோயல்பார்க்கொலைச்சம்பவம்தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜுட் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்காக இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும்சம்பவம்தொடர்பில்கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பாகவே இந்த விசாரணை இடம்பெற்றது. ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தனிநபர் ஒருவர் சமர்ப்பித்த மனுவின் பிரகாரம், ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ரோயல் பார்க் படுகொலை ஜூலை 2005இல் நடந்தது.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த யுவோன் ஜோன்சன் என்ற பெண் கொலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியை 2019ஆம் ஆண்டு பொதுமன்னிப்பின் மைத்திரிபால சிறிசேன விடுவித்தார்.






# நீர்கொழும்பின் பல பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு





பலத்த மழை காரணமாக கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தின் உள்வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நீர்கொழும்பு நகரின் பெரியமுல்லை பிரதேசத்தின் ஊடாக ஊடறுத்துச் செல்லும் தெபா எல பெருக்கெடுத்ததன் காரணமாக அங்குள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பெரியமுல்லை பிரதேசத்தில் தெனியாயவத்த, ரப்பர் வத்த, கோமஸ்வத்த உட்பட பல பிரதேசங்கள் மற்றும் உள்வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதன் காரணமாக பாதிக்கப்பட்ட சிலர் உறவினர்கள், நண்பர்களுடைய வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அத்துடன் கட்டுவ புவக்வத்த பிரதேசத்தில் உள்ள பல வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்குள்ள மக்கள் பலர் உறவினர்கள் நண்பர்களுடைய வீடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை தழுவகொட்டுவ முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மேல் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் மரம் ஒன்று விழுந்ததன் காரணமாக வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 29 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது உயிருக்கு ஆபத்து இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று (புதன்கிழமை) காலை 9:30 மணியளவில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார். காயமடைந்தவரின் உயிருக்கு ஆபத்து இல்லை என பிரதேச செயலாளர் உறவினர்களிடம் தெரிவித்தார். அத்துடன் விழுந்துள்ள மரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்.



# தமிழ் பேசும் மக்களுக்காக அவசர தொலைப்பேசி இலக்கம் அறிமுகம்

நாட்டில் சீரற்ற வானிலை நிலவி வருவதால் தொடர்ச்சியாக ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள், இடர்ப்பாடுகள் தொடர்பில் அறிவிக்க தமிழ் பேசும் மக்களுக்கென பிரத்தியேகமாக அவசர தொலைப்பேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ் பேசும் மக்களுக்கள் 107 என்ற அவசர தொலைப்பேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அனர்த்தம் தொடர்பில் அறிவிக்க முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2024இல் வெளியிடப்பெற்றது